மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு 2012 /2013

(மார்ச்/ஏப்ரல் 2015)

# OCC 3202 தமிழ்மொழித்திறன் II (ஆக்கத்திறன்)

01 JUN 2015

நேரம்: 03 மணித்தியாலங்கள்

**ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் எவையேனும் இரு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

## பகுதி - I

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல ஒருகா சேய்க்கும்
நிலங்கரி கள்ளியங் காடிறந்தோரே

அ) இப்பாடல் என்ன யாப்பு வகையைச் சேர்ந்தது என இனங்காண்க. (05 புள்ளிகள்)

ஆ) பாடலின் அசை சீர்களை இனங்கண்டு தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

02. சிறுகதை எழுதுகின்றபோது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துப் பரிசீலிக்குக. (25 புள்ளிகள்)

03. நாடகம் **அல்லது** புதுக்கவிதையின் இயல்புகளை விளக்குக. (25 புள்ளிகள்)

## பகுதி - II

04. அ) நவீன கவிதை மரபுக்கவிதையிலிருந்து வேறுபட்டமையை அதன் ஆக்கக்கூறுகளில் ஏற்பட்ட மாற்றமாகக் கொள்ளலாமா? விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) கவிதையின் ஆக்கக்கூறுகளில் பாரதி ஏற்படுத்திய மாற்றங்களைத் தெளிவுறுத்துக. (15 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** விடயத்தை மையமாக வைத்து ஒரு **சிறுகதை** எழுதுக.

அ) பல்கலைக்கழகப் பகிடிவதையினால் ஏற்படும் பாதிப்பு
ஆ) தொலைக்காட்சி நாடகங்களின் தாக்கம்
இ) 2009.05.19
ஈ) ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையும், பெற்றோரும்

(25 புள்ளிகள்)

06. 'வலை' **அல்லது** 'நினைவுகள்' என்ற தலைப்பில் புதுக்கவிதை ஒன்றினை எழுதுக. (25 புள்ளிகள்)

*******************************************************************************